**ஆகஸ்ட் – 12**

# TNPSC துளிகள்

- போலந்தில் உள்ள சர்வதேச வைஸ்லாவ் மேனியாக் நினைவு மைதானத்தில்/அரங்கில் நடைபெற்ற மகளிருக்கான ஈட்டி எறிதல் போட்டியில் இந்தியாவின் அன்னு இராணி 62.59 மீட்டர் தூரம் ஈட்டி எறிந்து தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.
- உத்தரப் பிரதேசத்தின் கஞ்ச்வாஜாவிலிருந்து ஜார்க்கண்டில் உள்ள கார்வா வரையிலான தொலைவிற்கு, 'ருத்ராஸ்திரா' எனும் 4.5 கிலோ மீட்டர் நீளமுள்ள ஆசியாவின் மிக நீளமான சரக்கு இரயிலினை இந்திய இரயில்வே நிர்வாகம் வெற்றிகரமாக பரிசோதனை செய்தது.
- பிரதான் மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா (PMMVY) திட்டத்தின் கீழ், அத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து (01.01.2017) 31.07.2025 ஆம் தேதி வரை 4.05 கோடிக்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு மகப்பேறு சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.
- டோக்கியோ ஒலிம்பிக் போட்டியின் ஈட்டி எறிதல் போட்டியில் தங்கப் பதக்கத்தை வென்ற நீரஜ் சோப்ராவின் வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியை கௌரவிக்கும் வகையில் ஆகஸ்ட் 07 ஆம் தேதியானது, இந்தியாவில் தேசிய ஈட்டி எறிதல் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## அகல் விளக்குத் திட்டம்




- புதுக்கோட்டையில் உள்ள கீரமங்கலம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் தமிழ்நாடு அரசு 'அகல் விளக்கு' எனும் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- இந்தத் திட்டமானது, இணையவெளிப் பாதுகாப்பில் வலுவான கவனம் செலுத்துவதுடன், மன, உடல் மற்றும் சமூக ரீதியான சவால்களிலிருந்து சிறுமிகளான மாணவிகளை (9 - 12 ஆம் வகுப்புகள்) பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மாநில அரசானது அனைத்து உயர்நிலைப் பள்ளிகளிலும் இந்தத் திட்டத்தினை செயல்படுத்த உள்ளது.

- இந்த முன்னெடுப்பின் கீழ், ஆசிரியர்கள் மற்றும் மாணாக்கர் அடங்கிய குழுக்கள், மாணவிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைக் கண்டறிந்து அதற்கான தீர்வுகளைப் பரிந்துரைக்கும்.
- இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக உளவியல் ஆலோசனையும் வழங்கப்படும்.

# தேசியச் செய்திகள்

## நிலம் & நீர்வழி நடவடிக்கைகள் மற்றும் இணையவெளி நடவடிக்கைகளுக்கான கூட்டுக் கோட்பாடு




- பாதுகாப்புப் பணியாளர்களின் தலைமைத் தளபதி (CDS) நிலம் & கடல் சார் நடவடிக்கைகளுக்கான கூட்டுக் கோட்பாட்டை வெளியிட்டார்.
- இந்தக் கோட்பாடு, போர் மற்றும் அமைதி ஆகிய இரண்டு சூழலிலும் சிக்கலான இராணுவ சூழல்களில் நிலம் & கடல்சார் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் படைத் தளபதிகளுக்கு செயல்பாட்டு வழிகாட்டுதலை வழங்குகிறது.
- மேம்படுத்தப்பட்ட ஒருங்கிணைப்பு மற்றும் கூட்டுச் செயல்படுத்தல் மூலம் இந்தியப் பெருங்கடல் பிராந்தியம் முழுவதும் ஆயுதப்படைகளின் திறனை அதிகரிப்பதே இதன் நோக்கமாகும்.
- இணையவெளிப் பாதுகாப்பு நடவடிக்கைகளைத் திட்டமிடுவதற்கும் செயல்படுத்துவதற்குமான உத்திசார் வழிகாட்டுதலை வழங்கும் இது அனைத்து இராணுவ நிலைகளிலும் விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.

## இந்தியாவின் பரபரப்பான கடல் சார் துறைமுகங்கள்

- இந்தியாவின் கடல்சார் துறையில், 2023 ஆம் நிதியாண்டில் 819 மில்லியன் டன்களாக இருந்த சரக்குக் கையாளுதல் ஆனது 2024 ஆம் நிதியாண்டில் 855 மில்லியன் டன்களாக உயர்ந்தது.
- பத்திரிகைத் தகவல் வாரியத்தின் (PIB) அறிக்கையின்படி, இது 4.3 சதவீத வருடாந்திர வளர்ச்சியைக் குறிக்கிறது.
- 2025 ஆம் ஆண்டு ஜூன் மாத நிலவரப்படி முதல் ஐந்து பெரிய துறைமுகங்கள்

மொத்தச் சரக்குகளில் 63.12 சதவீதத்தைக் கையாண்டதாக துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

- ஒடிசாவில் உள்ள பாரதீப் துறைமுக ஆணையம் (PPA) 13.14 மில்லியன் மெட்ரிக் டன் சரக்குகளைக் கையாண்டு, மொத்தச் சரக்குகளில் 18.04 சதவீதத்துடன் முதலிடத்தில் உள்ளது.
- குஜராத்தில் உள்ள தீன்தயாள் துறைமுக ஆணையம் (DPA) ஆனது இரண்டாவது இடத்தையும், மகாராஷ்டிராவில் உள்ள ஜவஹர்லால் நேரு துறைமுக ஆணையம் (JNPA) மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ளன.
- ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள விசாகப்பட்டினம் துறைமுக ஆணையம் (VPA) மற்றும் கொல்கத்தாவில் உள்ள சியாமா பிரசாத் முகர்ஜி துறைமுகம் (SMP) ஆகியவை முறையே 4வது மற்றும் 5வது இடத்தைப் பிடித்துள்ளன.
- முதல் பத்து இடங்களில், தமிழ்நாட்டில் உள்ள சென்னை துறைமுக ஆணையம் (7வது இடம்), காமராஜர் துறைமுக ஆணையம் (8வது இடம்), மற்றும் வ.உ. சிதம்பரனார் துறைமுக ஆணையம் (9வது இடம்) ஆகிய மூன்று முக்கிய துறைமுகங்கள் இடம் பெற்றுள்ளன.




# பொருளாதாரச் செய்திகள்

## AU சிறு நிதி வங்கி - முதல் பொது வங்கி


- AU சிறு நிதி வங்கி (AU SFB) ஆனது இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து (RBI) சிறு நிதி வங்கி என்ற நிலையிலிருந்து (SFB) பொது வங்கியாக மாறுவதற்கான கொள்கை ரீதியான முதன்மை ஒப்புதலைப் பெற்றது.
- இது AU SFB வங்கியினை பொது வங்கி என்ற அந்தஸ்துக்கான RBI ஒப்புதலைப் பெற்ற இந்தியாவின் முதல் சிறு நிதி வங்கியாக மாற்றுகிறது.
- AU சிறு நிதி வங்கியானது 1996 ஆம் ஆண்டில் AU நிதியமைப்பாக செயல்படத் தொடங்கியது. மேலும் 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஒரு சிறு நிதி வங்கியாக

மாறியது.

- இந்த வங்கியானது அளவு மற்றும் சேவை வழங்கீட்டில் இந்தியாவின் மிகப் பெரிய சிறு நிதி வங்கியாக உள்ளது.




## 2026 ஆம் நிதியாண்டின் முதல் காலாண்டில் மின்னணு ஏற்றுமதி




- 2026 ஆம் நிதியாண்டின் முதல் காலாண்டில் இந்தியாவின் மின்னணு ஏற்றுமதி ஆண்டிற்கு 47 சதவீதத்திற்கும் அதிகமாக உயர்ந்தது.
- மொத்த ஏற்றுமதி மதிப்பு 2025 ஆம் நிதியாண்டின் முதல் காலாண்டில் பதிவான 8.43 பில்லியன் அமெரிக்க டாலர்களுடன் ஒப்பிடும்போது 12.4 பில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டியது.
- 4.9 பில்லியன் டாலர்களாக இருந்த கைபேசி ஏற்றுமதியானது, 55 சதவீதம் அதிகரித்து 7.6 பில்லியன் டாலர்களாக உயர்ந்தது.
- 3.53 பில்லியன் டாலர்களாக இருந்த கைபேசி சாராத மின்னணு ஏற்றுமதிகள் 37 சதவீதம் அதிகரித்து 4.8 பில்லியன் டாலர்களாக உயர்ந்தது.
- 2024 ஆம் நிதியாண்டில் 29.1 பில்லியன் டாலர்களாக இருந்த மொத்த மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதி 2025 ஆம் நிதியாண்டில் 38.6 பில்லியன் டாலர்களாக உயர்ந்தது.
- இந்திய கைபேசி மற்றும் மின்னணுவியல் சங்கம் (ICEA) ஆனது 2026 ஆம் நிதியாண்டின்

இறுதிக்குள் ஏற்றுமதியானது 46 முதல் 50 பில்லியன் டாலர்களை எட்டும் என்று எதிர்பார்க்கிறது.


- இந்தியாவில் 2015 ஆம் நிதியாண்டில் 31 பில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்த மின்னணு உற்பத்தியானது 2025 ஆம் நிதியாண்டில் 133 பில்லியன் டாலர்களாக அதிகரித்துள்ளது.

## இறக்குமதி மற்றும் ஏற்றுமதி 2025-26

INDIA'S TOP AGRICULTURAL EXPORT ITEMS (in million dollars)

| | 2024-25 | Apr-Jun 2024 | Apr-Jun 2025 | % Growth |
|---|---|---|---|---|
| Marine products | 7405.00 | 1628.87 | 1945.70 | 19.45 |
| Basmati rice | 5944.48 | 1544.92 | 1494.40 | -3.27 |
| Non-Basmati rice | 6527.58 | 1263.34 | 1413.02 | 11.85 |
| Spices | 4451.54 | 1088.89 | 1154.04 | 5.98 |
| Buffalo meat | 4060.54 | 793.28 | 896.82 | 13.05 |
| Coffee | 1805.57 | 519.80 | 588.07 | 13.14 |
| Fruits & vegetables | 2065.39 | 459.14 | 522.44 | 13.79 |
| Tobacco | 1979.01 | 426.86 | 509.19 | 19.29 |
| Processed F&V | 1805.76 | 384.37 | 429.80 | 11.82 |
| Castor oil | 1152.37 | 348.34 | 355.31 | 2.03 |
| Oilseeds | 1344.31 | 332.22 | 306.01 | -7.89 |
| Oilmeals | 1344.39 | 330.69 | 290.19 | -12.25 |
| TOTAL | 51940.67 | 12209.66 | 12922.32 | 5.84 |

Source: Department of Commerce




- இந்திய ரிசர்வ் வங்கி (RBI) கணக்கெடுப்பு ஆனது, 2025-26 ஆம் ஆண்டில் சரக்குகள் இறக்குமதி 2.5 சதவீதம் அதிகரிக்கும் என்று கணித்துள்ளது.
- 2025-26 ஆம் ஆண்டில் சரக்குகளின் ஏற்றுமதி 1.2 சதவீதம் அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- இறக்குமதியின் வளர்ச்சியானது, நடப்பு நிதியாண்டில் ஏற்றுமதியின் வளர்ச்சியை விட இரு மடங்கிற்கும் அதிகமாகும்.
- 2026-27 ஆம் ஆண்டில், அமெரிக்க டாலர் அடிப்படையில் ஏற்றுமதிகள் 4.9 சதவீதமும், இறக்குமதிகள் 6.0 சதவீதமும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- வர்த்தக ஏற்றத்தாழ்வு ஆனது, 2025-26 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 0.8 சதவீத நடப்புக் கணக்கு பற்றாக்குறையை (CAD) ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- CAD ஆனது, 2026-27 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 0.9 சதவீதமாக சற்று உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இந்தியாவின் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியானது 2025-26 ஆம் ஆண்டில் 6.4 சதவீதமாகவும், 2026-27 ஆம் ஆண்டில் 6.7 சதவீதமாகவும் இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- நுகர்வோர் விலைக் குறியீட்டு (CPI) பணவீக்கம் 2025-26 ஆம் ஆண்டில் 3.1 சதவீதமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- நுகர்வோர் விலைக் குறியீட்டு (CPI) பணவீக்கம் 2026-27 ஆம் ஆண்டில் 4.4 சதவீதமாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- உணவு, பானங்கள், புகையிலை, போதைப் பொருள், எரிபொருள் மற்றும் விளக்கு

சார்ந்த பொருள் ஆகியவற்றைத் தவிர்த்து நுகர்வோர் விலைக் குறியீட்டுப் பணவீக்கம் 2025-26 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் 4.4 சதவீதமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## பாரத்ஜென் AI

- பாரத்ஜென் செயற்கை நுண்ணறிவு ஆனது புது டெல்லியில் நடைபெற்ற பாரத்ஜென் உச்சி மாநாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இது இந்தியாவின் முதல் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட அரசாங்கத்தினால் நிதியளிக்கப்பட்ட செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான இந்திய மொழிகளுக்கான பல்நோக்குப் பெரிய மொழி மாதிரியாகும்.
- தற்போது, இந்த மாதிரிகள் இந்தி, மராத்தி, தமிழ், மலையாளம், வங்காளம், பஞ்சாபி, குஜராத்தி, தெலுங்கு மற்றும் கன்னடம் ஆகிய ஒன்பது மொழிகளில் செயல்படுகின்றன.
- இது 2026 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் திட்டமிடப்பட்ட 22 இந்திய மொழிகளிலும் கிடைக்கப்பெறும்.
- பாரத்ஜென் மாதிரியானது, பல்துறை இணையவெளி அமைப்புகள் குறித்த தேசிய திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டது.
- இது இந்திய விழுமியங்களில் வேரூன்றிய நெறிமுறை, உள்ளடக்கிய மற்றும் பன்மொழி செயற்கை நுண்ணறிவை ஆதரிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இது சுகாதாரம், கல்வி, வேளாண்மை மற்றும் நிர்வாகத்திற்கான செயற்கை நுண்ணறிவு சார்ந்த தீர்வுகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.





# சுற்றுச்சூழல் செய்திகள்

## கொலராடோ நதி நீர் நெருக்கடி 2025

- சமீபத்தில், அரிசோனா மாகாணமானது தற்போதைய நதி ஓட்டங்களின்

அடிப்படையில் தண்ணீர் அளவினை ஒதுக்க ஒரு புதிய முறையை முன்மொழிந்துள்ளது.

- மில்லியன் கணக்கான மக்களுக்கு ஒரு முக்கிய நீர் ஆதாரமாக விளங்கும் கொலராடோ நதியில் நீரளவு குறைந்து வருவதால் நெருக்கடியை எதிர்கொள்கிறது.
- கொலராடோ நதி வட அமெரிக்காவில் அமைந்துள்ளது என்பதோடு முதன்மையான அதன் பகுதி தென்மேற்கு அமெரிக்காவிலும் வடமேற்கு மெக்சிகோவில் ஒரு சிறிய பகுதியும் உள்ளது.
- கொலராடோ நதி அமைப்பின் பெரும்பாலான நீர் ஆனது அதன் மேல் மட்ட நதிப் படுகையில் உள்ள ராக்கி மலையின் பனி உருகுதலில் இருந்து வருகிறது.
- ஆற்றின் ஓட்டத்தில் சுமார் 85% ஆனது, நதிப் படுகைப் பகுதியில் உள்ள வெறும் 15% இடத்திலிருந்துதான் உருவாகிறது.
- 25 ஆண்டுகளுக்கும் மேலாக உள்ள, நீடித்த வறட்சி மற்றும் பருவநிலை மாற்றம் காரணமாக அவற்றின் நீர்மட்டம் கடுமையாகக் குறைந்துள்ளது.





# மாநிலச் செய்திகள்

## வெப்பத் தகவமைவு கொண்ட மூடடி திட்டம்

- கேரள மாநிலப் பேரிடர் மேலாண்மை ஆணையம் ஆனது, கோழிக்கோட்டின் மூடடி பஞ்சாயத்தில் வெப்பத் தகவமைவு கொண்ட மூடடி திட்டத்தைத் தொடங்கியது.
- அதிகரித்து வரும் வெப்ப அலைகளைச் சமாளிக்க மாநிலத்தில் உள்ள முதல் உள்ளாட்சி அரசு தலைமையிலான வெப்ப நடவடிக்கைக்கான செயல் திட்டம் இதுவாகும்.
- ஒன்றரை ஆண்டு கால சமுதாய அடிப்படையிலான ஆராய்ச்சிக்குப் பிறகு பருவநிலை மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைகளைச் சேர்ந்த நிபுணர்கள் இந்தத் திட்டத்தை மேற்கொள்ள வழிநடத்தினர்.
- இந்தத் திட்டத்தின் சோதனையானது, அங்கன்வாடிகளில் செயல்படுத்தப்படும், பின்னர் 32 மையங்கள் மற்றும் முக்கிய நிறுவனங்களுக்கு விரிவுபடுத்தப்படும்.
- உள்ளாட்சிக் கட்டிடங்களுக்கு வெப்பத்தை பிரதிபலிக்கும் வண்ணப்பூச்சுகள்,

மூங்கில் தடையமைப்புகள் மற்றும் சூரிய ஒளித் தடுப்பு/நிழல் தரும் சாளரங்களைப் பயன்படுத்துவதை இந்த வழிகாட்டுதல்கள் ஊக்குவிக்கின்றன.

❖ மூடடி பஞ்சாயத்து அதன் செயலூக்க மாதிரிக்காக ஆணையத்தினால் பருவநிலை மாற்றத்திற்கான 'செயலில் உள்ள ஆய்வகமாக' தேர்ந்தெடுக்கப்பட்டது.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## டாக்டர் M.S. சுவாமிநாதன் நூற்றாண்டு மாநாடு




❖ டாக்டர் M.S. சுவாமிநாதன் நூற்றாண்டு சர்வதேச மாநாடு ஆனது புது டெல்லியில் உள்ள ICAR PUSA எனுமிடத்தில் நடைபெற்றது.

❖ இந்த மாநாட்டின் கருத்துரு, "Evergreen Revolution – The Pathway to Bio happiness" என்பதாகும்.

❖ டாக்டர் சுவாமிநாதனின் நினைவாக ஒரு சிறப்பு நூற்றாண்டு நினைவு அஞ்சல் தலை வெளியிடப்பட்டது.

❖ M.S. சுவாமிநாதன் அவர்கள் 'இந்தியப் பசுமைப் புரட்சியின் தந்தை' என்று போற்றப்படுகிறார்.

❖ அதிக மகசூல் தரும் கோதுமை மற்றும் அரிசி வகைகளை உருவாக்குவதில் நார்மன்

போர்லாக் உடன் இணைந்து பணியாற்றினார்.

- குறிப்பிடத்தக்க வகையில், பகுதியளவு வளர்ச்சி குன்றிய கோதுமை வகைகள் ஆனது 1960 மற்றும் 1970 ஆம் ஆண்டுகளில் இந்திய வேளாண்மையில் புரட்சியை ஏற்படுத்தின.
- 1987 ஆம் ஆண்டில் அவருக்கு முதல் உலக உணவுப் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டது.


# முக்கிய தினங்கள்

## தேசியக் கைத்தறி தினம் 2025 - ஆகஸ்ட் 07

- இத்தினமானது, 1905 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 07 ஆம் தேதியன்று சுதேசி இயக்கம் தொடங்கப்பட்டதை நினைவு கூர்கிறது.
- வங்காளத்தைப் பிரிப்பதற்கான ஆங்கிலேய அரசாங்கத்தின் முடிவிற்கு எதிர்வினையாக இது மேற்கொள்ளப்பட்டது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Weaving Innovation into Tradition" என்பதாகும்.




## வெள்ளையனே வெளியேறு இயக்க தினம் 2025 - ஆகஸ்ட் 08





- வரலாற்று சிறப்புமிக்க வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஆனது 1942 ஆம் ஆண்டு

ஆகஸ்ட் 08 ஆம் தேதியன்று மும்பையில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் குழுவின் அமர்வின் போது தொடங்கப்பட்டது.

- கிரிப்ஸ் திட்டம் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து ஆங்கிலேய ஆட்சியை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வர இந்த இயக்கம் கோரியது.
- இதைத் தொடர்ந்து, குவாலியா எரி மைதானத்தில் M.K. காந்தி அவர்கள் "செய் அல்லது செத்து மடி" என்ற சக்திவாய்ந்த முழக்கத்தை விடுத்தார்.
- "சைமனே திரும்பிச் செல்" என்ற முழக்கத்தை உருவாக்கிய யூசுப் மெஹரலி என்பவரே "வெள்ளையனே வெளியேறு" என்ற முழக்கத்தையும் உருவாக்கினார்.

## நாகசாகி தினம் 2025 - ஆகஸ்ட் 09

- 1945 ஆம் ஆண்டில் நடைபெற்ற இரண்டாம் உலகப் போரின் போது ஜப்பானிய நகரமான நாகசாகி மீது அணுகுண்டு வீசப்பட்ட துயர சம்பவத்தை நினைவு கூரும் வகையில் இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.
- ஹிரோஷிமா குண்டுவீச்சுக்கு மூன்று நாட்களுக்குப் பிறகு, 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 09 ஆம் தேதியன்று, அமெரிக்கா நாகசாகி மீது "ஃபேட் மேன்" என்ற பெயரிலான அணுகுண்டை வீசியது.
- சில நாட்களுக்குப் பிறகு, 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் தேதியன்று, ஜப்பான் சரணடைந்தது என்பதோடு இது இரண்டாம் உலகப் போரின் முடிவைக் குறித்தது.





# இதரச் செய்திகள்

## 2025 ஆம் ஆண்டின் முதல் பாதியில் தேசிய நெடுஞ்சாலை விபத்துக்கள்

- இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் தேசிய நெடுஞ்சாலைகளில் (NH) 29,018 பேர் விபத்தினால் உயிரிழந்தனர்.
- இது கடந்த ஆண்டின் மொத்த உயிரிழப்புகளில் ஒப்பிடும்போது 50 சதவீதத்திற்கும் அதிகமானதாகும்.
- இந்தியாவின் மொத்த சாலை வலையமைப்பில் தேசிய நெடுஞ்சாலை 2% பங்கு மட்டுமே இருந்தாலும், சாலை விபத்து சார்ந்த உயிரிழப்புகளில் அவை 30 சதவீதத்திற்கும் அதிகமாகப் பங்களிக்கின்றன.
- 2025 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை தேசிய நெடுஞ்சாலைகளில் 67,933 விபத்துகள்

நடந்துள்ளதாக தரவு காட்டுகிறது.

- 2024 ஆம் ஆண்டில், தேசிய நெடுஞ்சாலைகளில் நடைபெற்ற 1,25,873 விபத்துகளில் 53,090 பேர் உயிரிழந்தனர்.
- 2023 ஆம் ஆண்டில், நடைபெற்ற 1,23,955 விபத்துகளில் 53,630 பேர் உயிரிழந்தனர்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★